# சங்க இலக்கதியத்தில் நீர் நிர்வாகம்

**சா. இம்மானுவேல்**
பதிவு எண்.: 22211174021015
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஆய்வு மையம்
கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகப்பட்டி

**முனைவர் சௌந்தர்ராஜ்**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்
கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிசேகப்பட்டி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7714

**ஆய்வுச்சுருக்கம்**
*பழந்தமிழர் நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர். மழைநீரை குளம், ஏரி போன்ற நாற்பத்தேழு வகையான நீர் சேமிப்பு மையங்களில் சேமித்துவைத்து வேளாண்மைக்கும், குடிநீருக்கும் பயன்படுத்தினர். இவற்றை விளக்குமுகமாக இக்கட்டுரை விளங்குகிறது.*

## முன்னுரை

“நீரின்றி அமையா உலகு” (குறள் 20) என்னும் வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப உலகம் கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதியாகும். நீரிலிருந்து தோன்றிய உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியே மனித இனமாகும். பல்வேறு உயிர் இனங்களையும் உருவாக்கி அவற்றிற்கு தானும் உணவாகி தன் பயணத்தைச் சலனமில்லாமல் கொண்டு செல்வது நீர். இத்தகு பயன்மிக்க நீரை நாம் சரியாகப் பயன் படுத்துகின்றோமோ என்றால் அஃது ஐயத்திற்கு இடமான ஒன்றேயாகும். நீரின் தேவை, நீர் உருவாக்கம், நீர் சேகரிப்பு, நீரினை கையாளும் முறை, நீரின்றி வாழ்தலின் கொடுமையைப் பற்றி தமிழ் இலக்கியங்களின் வழியில் காண்போம்.

## சங்க இலக்கியத்தில் நீர் சேகரிப்பு

இயற்கையாகக் கிடைக்கும் நீர், உலக மக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்வதற்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காகவே என்பதை மறந்து சுய நுகர்வுகளிலேயே பாழ்படுத்தி விடுகின்றனர். நீர் உருவாகக் காரணமாக உள்ள காடுகளை அழித்துக் கட்டிடங்களாக்குகின்றனர்.

ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் பண்டையத் தமிழர்கள், நீரின் சிறப்பை, அதன் இன்றியமையாமையை சங்கப் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

**“வையை உடைந்த மடையடைத்தக் கண்ணும்**
**பின்னு மலிரும் பிசிர் போல வின்னும்”[1]**
**(பரி. 6)**

**“ஆறு குளம் நிறைக்குற போல அல்குலும்”[2]**
**(அகம். 11)**

**“ஊர் உண் கேணி உண் துறைத் தொக்க”[3]**
**(குறுந் : 399)**

என்னும் பாடல் வரிகளில் நீர் சேகரிப்பை விளக்குகின்றனர். மடை, கால்வாய், குளம், கேணி உள்ளிட்டவை மூலம் நீரினைச் சேமித்து வந்துள்ளனர் என்பதை பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இது பருவ நிலை பொய்த்து வறட்சியான வாழ்க்கை உருவாகக் கூடும் என்ற முன்னெச்சரிக்கை உணர்வு சங்க கால மக்களிடம் இருந்து ள்ளமையும், அவர்கள் பருவ நிலையை நன்கு உணர்ந்து நீரினைச் சேகரித்துள்ளனர் என்பதையும் மெய்ப்பித்துள்ளது.

### நீர் நிலைகள் பாதுகாப்பு

நீர் நிலைகளில் கரை அழியாமல் இருப்பதற்குப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். நீர் நிலைகளின் கரையழியாமல் இருக்க வேழக் கரும்பு என்றும், கொறுக்கைச்சி என்று கூறப்படும் புல்லினை வளர்ப்பர். கொறுக்கந்தட்டு என்பதும் இதுவே. இஃது இக்காலத்து வழங்கும் பெயராகும். குதிரைக்கு வலிவைத் தருவது இது. புல்வகைகளில் இதுவும் ஒன்று. இதன் பூ வெண்மை நிறம் கொண்டது. கரும்பு பூவின் வடிவம் கொண்டது. இதன் பூவின் தோற்றம் குதிரையின் தலைமயிரையும், உயரப் பறக்கும் குருகையும் போல விளங்கும். இது துளையுடையது. இதன் தண்டில் துறை இருந்தமையால் உழவர் மகளிர் அஞ்சனம் இட்டு வைப்பர். மூங்கிலைப் போல் இவை வீடுகட்டி வரிச் சற்பிடித்தற்குப் பயன்படும். நீராடுபவர்க்கு இது மறைவிடமாய் அமைக்கப்படுவது உண்டு என்பதை.

**“பரியுடை நன்மான் பொங்குளை அன்ன**
**வடகரை வேழம் - வெண்புப்பகரும்**
**தண்டுறை யுரன் பெண்டீர்**
**துர்குல் “யாமத:துந்துயிலறியலரே”**
**(ஐங்கு 13:12)**

என்னும் இப்பாடல் உணர்த்துகிறது.

### நீர்த்தேக்கப் பராமரிப்பு முறை

நீர்த்தேக்கங்களை அமைத்ததோடு மட்டுமல்லாமல் அந்நீரை இரவு பகலென்று பாராது அதனை ஒழுங்குபடுத்தும் பணியிலும் காவலர்கள் இருந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

நீர் வரவு அதிகமானாலோ அல்லது கசிவு ஏற்பட்டாலோ, காவலர்கள் அதனை ஊர் மக்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துவர் என்றும், இதனைச் சரிப்படுத்தும் வகையாக ஊர் மக்கள் மணல் பைகளைக் கொண்டு கரையின் உயரத்தை உயர்த்துவர் என்றும் பரிபாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**“வரைச்சிறை உடைந்தை வையை வையைத்**
**திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறை அறைக எனும்**
**உரைச்சறைப் பறைஎழெளஉர் ஒலித்தன்று”[5]**
**(பரி 6: 22-25)**

ஏரி, குளம், நீர்த்தொட்டிகள் போன்ற நீர்த்தேக்கங்கள் நாளடைவில் பழுதடையும் பொழுது அதன் கரைகளை உயர்த்துதல், நீர்க் கசிவுகளைச் சீர்ப்படுத்துதல் என்றும், நீர்த் தேக்கங்களிலுள்ள நீர், வறட்சிமிக்க காலக் கட்டத்தில் அவற்றிலுள்ள பாசி, பழைய நீர் ஆகியவற்றை அப்புறப்படுத்திப் புதிய நீரை நிரப்பதல் ஆகியவையும் பராமரிப்புப் பணியாகும்.

***நீர் நிலைகள்***

*மழை நீரைச் சேமித்து வைப்பதற்காக நீர் நிலைகளை அமைப்பது என்பது முக்கியமான ஒன்றாகும். இவற்றை நம் பழந்தமிழர்.*

***"உணவெனப்படுவது நிலத் தொடு நீரே***
***நீரூ நிலனும் புணரி யோரீண்***
***டுடம்பு முயிரும் படைத்திசி னோரே***
***வித்திவா நோக்கும் புன்புலங் கண்ணகன்***
***தட்டோ ரம்ம விவட்ட டோரே***
***தள்ளா தோரிவட் டள்ளா தோரே"[6]***

***(புறம் 18:21-30)***

*நீர் இல்லா நிலத்தில் நீர் நிலையுண்டு பண்ணுதல், ஆறு, ஏரி, குளம் முதலியவற்றால் நீர் வருவாயின்றி மழை வருவாயொன்றையே நோக்கிப் புன்செய் நிலங்கள் இருக்கின்றது என்று கூறுகின்றனர். மேலும் நலனொளி மருங்கில் நெடிய நீண்ட கரையெடுத்து நீரைத்தேக்கி வேண்டுமளவிற் பயன்படுமாறு கட்டி வைக்கின்றனர் என்பதையும் இப்புறநானூற்றுப் பாடல் வரிகள் சுட்டிக் காட்டியுள்ளதை அறிய முடிகிறது. மேலும்*

***"நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த***
***துறுநீர்க் கடம்பின் துணையோர் கோதை"[7]***

***(சிறுபாண் 68-69)***

*சிறுபாணற்று அடிகள் மக்களால் ஆக்கப்படாமல் இயற்கையாய் அமைந்த நீர் நிலை இருந்துள்ளதை விளக்குகிறது.*

*மனித உணர்வுகளைப் போன்றே விலங்குகளுக்கும், உள்ள உணர்வைக் காட்டகத்தே களிறு துடிபோலும் அடியையுடைய யானைக் கன்றுகள் இழிந்து தாயும் தந்தையும் உண்ண வேண்டும் என்று கருதாது கலங்கிய சிறிய நீரை, முதலில் தன் பிடிக்கு ஊட்டிப் பின்பு தான் உண்ணும் என்ற செய்தியை,*

***"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்றீரைப்***
***புரிடியுட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு***
***முறைத்தனரே"[8]***

***(கலி 11: 8-9)***

*இப்பாடல் எடுத்துரைக்கப்படுகிறது.*

*பயிர்த்தொழிலுக்கு நிலத்தை அடுத்து நீர் வளம் மிக முக்கியமான ஒன்றாகிறது. ஒரு நாட்டின் வளம் அந்நாட்டின் நீர்வளத்தைக் கொண்டே அமைகிறது. அதனால் பண்டைக் காலந்தொட்டே மக்கள் பயிர்த்தொழிலுக்குக் குறைவிலா நீர்வளம் தேவை என்பதை உணர்ந்திருந்தனர் என்பதை,*

***"நீரின் றமையா வுலகம் போலத்***
***தம்மின் றமையா நயந் தருளி"[9]***

***(நற்றி 1 : 6-7)***

*இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. மேலும் அருவி நீரும் சுனை நீரும் பயிர்த்தொழிலுக்குப் பயன்பட்டன என்பதை,*

***"அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர் கால்யாப்ப"[10]***

***(நற்றி 5 : 2)***

*என்ற பாடல் அடியின் மூலம் அகன்ற வாய்க்கால் அமைக்கப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. மழையினால் கிடைக்கும் நீரினையும் அருவிகளில் இருந்து கிடைக்கும் நீரினையும், சுனையில் சேமித்துப் பின் அகன்ற வாய்க்கால்களின் மூலம் நீர் பாய்ச்சியுள்ளனர் என்பதையும் விளக்கி நிற்கின்றன.*

*மேலும், நீர் அதிகமான பகுதிகளில் மீன்கள் உலாவும், நீர் நிறைந்த குளங்கள் குவளையம், தாமரையும் மலர்ந்து விளங்கும். நீர் வளம் வாய்ந்த ஊரின் சிறப்பினை.*

***"கீழ்நீரான் மீன் வழங்குந்து***
***மீநிருாற் கண்ணன்ன மலர் புக்குந்து***
***கழிசுற்றி விளை கழனி***
***அரிப்பறையாற் புள்ளோப் புற்று"[11]***

***(புறம் 396 : 1-4)***

*புறநானூற்றுப் பாடல் அடிகள் எடுத்தியம் பிள்ளதை அறியலாம்.*

***நீர்நிலைத் தேக்கங்கள்***

*வெள்ளப் பெருக்கால் பெருகிவரும் ஆற்று நீரின் வரிசையைக் கட்டுப்படுத்தித் தேக்கி வைக்கும் நிலையில் கல்லால் ஆன அணையைக் கட்டினர் என்ற செய்தியைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் காணலாம்.*

***"வருவிசைப் புனலைக் கற்சிலைபோல"[12]***

பகைவன் தன்னைத் தாக்க வந்த போது தலைவனிடம் காணப்பட்ட உறுதியானது, கற்களால் கட்டப்பட்ட அணையில் பொங்கிவரும் வெள்ளநீரைத்தாங்கிநின்றது போல் என்று குறிப்பிடுவதன் வாயிலாக அக்காலத்திலேயே இவ்வகையான நீர்த்தேக்க முறையைச் சங்கத் தமிழர்கள் கையாண்டுள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

புறநானூற்றில் தேக்கமான இடங்களில் நீரைச் சேகரிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளர்

**“நிலன் நெறி மருங்கில் நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம இவண் தட்டோரே**
**தள்ளாதோர் இவண் தள்ளாதோரே”**

**(புறம் 18: 28-30)**

நம் தாய்த் திருநாட்டில் ஓடி வரும் ஆறுகளில் காவிரி ஆறானது தன் பெயரிலேயே அகண்ட காவிரி என்று பெயர் கொண்டுள்ளது.

வேளாண்மையைப் பெருக்க அணையைக் கட்டி நீரைத் தேக்க வைக்கலாம் என்று அறிந்து பல நீர் நிலைத் தேக்கங்களை ஏற்படுத்தினர். மழை நீரானது பயன் இல்லாது பெருக்கெடுத்து ஓடுவதை அறிந்து பழந்தமிழர்கள் அதனை வாரி, மதகு, மடை, மடு, கால்வாய், அணை மூலம் தேக்கி வைத்துப் பயன்படுத்துவதை அறிந்திருந்தனர் என்பதை,

**“ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்கால்”[14]**

**(கலி 35 : 5)**

பளிங்கு போன்ற தெளிவாக நீரையுடைய பொய்கை பற்றி,

**“மலர்தாய பொழில் நண்ணி மணி நீர்**
**கயம் நிற்ப”[15]** **(கலி 35 : 5)**

இப்பாடல் அடிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

## நீர் நிலைகளைக் காவல் செய்தல்

சங்க காலத்தில் வாழ்ந்த நம் பழந்தமிழ் மக்கள் நீர் நிலைகளைக் காவல் காத்து ள்ளனர் என்பதை,

**“தொழின் மழை பொழிந்த பானாள் கங்குல்**
**எறிதிரைத் திவலை தூறும் சிறு கோட்டுப்**
**பெருங்குளக் காவலன் போல”[16]**

**(அகம் - 252)**

வெள்ளை நிற ஈங்கைப் புக்கள் உதிரும்படி வீசி, நள்ளிரவில் பொழியும் பருவ மழைத் திவலைகள் தாக்குகையில், சிறிய கரையை உடைய பேரிய குளத்தைக் காப்பவன் உறங்காமல் இருப்பது போல என் தாய் என்னை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறாள் என்று தலைவி தோழியை வினவுகிறாள். இதிலிருந்து நீர்நிலையினைக் காவல் செய்ய ஒருவன் நியமிக்கப் பட்டுள்ளான் என்பதை அறியலாம்.

## முடிவுரை

சங்க காலத்து மக்கள் நீரின் அருமையை உணர்ந்து சரியான முறையில் கையாண்டுள்ளனர் என்பதை அறியலாம். பண்டையத் தமிழரின் வாழ்வியலை ஏட்டுக் கல்வியுடன் மட்டும் நிறுத்தாமல் இன்றைய வாழ்வாதாரத்திற்கும் பயன்படுத்திக் கொண்டால் நீராதார வாழ்வைப் பெற்று நிறைவாக வாழலாம்.

## அடிக்குறிப்புகள்

1. பரி, பக் 6
2. அகம் பக் 11
3. குறந், பக் 399
4. ஐங்கு 13 : பக் 1-2
5. பரி 6: பக் 22-25
6. புறம் 18 பக் 21-30
7. சிறுபாண் பக் 68-69
8. கலி 11 : பக் 8-9
9. நற்றி 1 பக் 6-7
10. மேலது 5
11. புறம் 18 பக் 1-4
12. தொல் : புறம் : 65
13. புறம் 18 பக் 28-30
14. கலி 35 : பக் 5
15. மேலது
16. அகம் 252